**சார்பு நீதிமன்றம், இலால்குடி.**

நாள்:30.01.2023 திங்கட்கிழமை

OS.No. 358/2018 PW1: வினோத்

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விவசாயம் செய்கிறேன், நகை அடகு கடை வைத்திருக்கிறேன். நகை அடகு கடை 10 வருடங்களாக வைத்திருக்கிறேன். பிரதிவாதிக்கு கடன் கொடுக்கும் போது ரொக்கமாக கொடுத்தேன். சொத்தை கிரயம் செய்வதற்காக பணம் கொடுத்தேன். அதற்கான மூல ஆவணங்களை வாங்கினேனா என்று ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் எதற்காக எழுதப்பட்டது என்றால் சொத்து வாங்குவதற்காக எழுதப்பட்டது. 8 லட்சம் பேசி 5 லட்சம் அட்வான்ஸ் கொடுத்தேன். கிரயத்திற்கு வாங்குவதற்காக என்றால் அசல் ஆவணத்தையும் வாங்கியிருப்பேன் என்றால் ஞாபகம் இல்லை. என்னிடம் வேறு அசல் ஆவணங்கள் இல்லை என்றால் இருக்கிறது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அடமான கடனுக்காக கிரய மூல ஆவணங்களை கொடுத்தார் என்றும் நான் அதை ஒப்பந்த பத்திரமாக மாற்றி எழுதி கொண்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மைத்துனர் ரவிக்குமார் என்பவரை எனக்கு தெரியாது. திருச்சிராப்பள்ளி மாவட்ட இரண்டாவது கூடுதல் நீதிமன்றத்தில் ரவிக்குமார் பிரதிவாதி என்றும், அவர் மீது இரண்டு காசோலைகள் கொடுத்ததாக OS.No.196/2017 என்று வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பாணை பெற்றிருக்கிறேனா என்றால் சரிதான். ஆனால் மகாலிங்கத்தோடு தொடர்பு உடைய ரவிக்குமாரை தெரியாது. (இது பற்றி எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்று ஆட்சேபிக்கப்பட்டது). தொடர்புடைய வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விட்டதால் அது பற்றி எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2015ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருக்கிறேன் என்றால் சரிதான். 2017ல் இவ்வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் பிரதிவாதிக்கு எதிராக எந்த வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் பிரதிவாதியிடம் நான் அசலையும், வட்டியையும் வாங்கிவிட்டதால் வழக்கை தாக்கல்

செய்யவில்லை என்றால் சரியல்ல. நோட்டீஸை பெற்ற பிறகு பிரதிவாதி என்னை அணுகி மீதி தொகையை செலுத்திவிடுவதாக சொன்னதன் பேரில் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஒப்பந்த தேதியில் இருந்து 4 வருடங்களாக அசலையும் வட்டியையும் வாங்கி கொண்டருந்தேன் என்றால் சரியல்ல. பிரதி மாதம் 21 ஆயிரம் என 10 லட்சத்து 8 ஆயிரம் ரூபாய் இதுவரை பிரதிவாதி கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. அதிக வட்டியுடன் பிரதிவாதி சொத்தையும் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. இது போன்ற வழக்குகளை நிறைய பேர் மீது திருச்சியிலும், இலால்குடியிலும் நான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. இது வரை வேறு யார் மீதும் வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பாணை வாங்கவில்லை. கிரய ஒப்பந்த ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்டது யார் என்றால் எனது அப்பா விஸ்வநாதன் போட்டிருக்கிறார். இன்னொரு நபர் யார் என்று எனக்கு தெரியாது. அவரை பிரதிவாதி அழைத்து வந்தார். கிரய ஒப்பந்த ஆவணத்தை தயார் செய்தது யார் என்றால் சரவணன் தயார் செய்தார்,நானும் பிரதிவாதியும் சேர்ந்து தயார் செய்ய சொன்னோம். பிரதிவாதி எந்த தொகையையும் திருப்பி செலுத்தவில்லை. 5 வருடங்களாக அவர் ஏன் திருப்பி செலுத்தவில்லை என்றால் நான் காரணத்தை ஏன் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். கிரய சொத்து பூவாளூரில் உள்ளது. அதன் சர்வே எண். 50/1. அந்த சொத்து மெத்தை வீடாகும். அதில் நான் பார்த்த போது அந்த வீட்டில் யார் யார் இருந்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. அந்த வீட்டில் தான் ரவிக்குமாரும், பிரதிவாதியும் சேர்ந்து குடும்பம் நடத்துகிறார்கள் என்றும் அதை தெரிந்து கொண்டே வேண்டுமென்றே ஞாபகம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வீட்டின் மதிப்பு சுமார் 10 லட்சம் இருக்கும். அதன் சதுரடி 2400. ஒரு சதுரடி என்ன விலை போகும் என்று தெரியாது. சொத்து மதிப்பு 60 லட்சம் என்றும் ஆனால் நான் மதிப்பை பொய்யாக குறைத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. பலபேரிடம் கடன் கொடுத்துவிட்டு சொத்தை எடுத்து கொண்டதற்காக என்மீதும் என் தகப்பனார் மீதும் குற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை.சென்ற மாதம் என்

தகப்பனாரை கைது செய்தார்கள் என்றால் சரிதான். எதற்காக கைது செய்தார்கள் என்று அப்பாவுக்கும் தான் தெரியும் அவ்வழக்கில் நான் ஒரு குற்றவாளி என்றால் சரிதான். அவ்வழக்கில் முன்பிணை பெற்றிருக்கிறேன் என்றால் சரிதான். பிரதிவாதியிடம் பணம் முழுவதையும் பெற்று கொண்டு அவரது மூல ஆதாரங்களையும் திருப்பிதாராமல் பொய்யாக பிணையப்பட்டு ரவிக்குமார், மற்றும் பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றத்தில் போலியாக தீர்ப்பு பெற முயற்சிக்கிறேன் என்றால் சரியல்ல. பண பரிவர்த்தனைக்கு வரவு செலவு கணக்கு எதுவும் வைக்கவில்லை. நகைக்கு மட்டும் வைத்திருக்கிறேன். மணிலெண்டர் உரிமத்தில் கணக்கு காண்பிக்கும் போது எல்லா பரிவர்த்தனைகளும் காண்பிக்க வேண்டும் என்றால் நகை அடகு கடை உரிமம் தான் பெற்றிருக்கிறோம். பணம் கொடுக்கும் போதும், வாங்கும் போதும் ரசீது எதுவும் கொடுப்பதும் இல்லை வாங்குவதும் இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் பணம் கொடுக்கல் வாங்கல் இருந்திருந்தால் கணக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. 2015 ற்கு பிறகு வழக்கு தாக்கல் செய்யும் வரை வேறு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இதே போன்ற வழக்கை இதே நீதிமன்றத்தில் தமிழரசி என்பவர் மீது தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி பணம் கொடுக்கும் போது ரவிக்குமார், சரவணன், கிருஷ்ணமூர்த்தி, வெங்கடேஷன் மற்றும் அவரது நண்பர்கள் முன்னிலையில் அசலும் வட்டியுமாக கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு எந்த தொகையும் தரவேண்டியது இல்லை என்றும் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

/Signed/
வினோத்

/Signed /
A.B.நசீர் அலி, B.A.,B.L.,
சார்பு நீதிபதி(FAC)
இலால்குடி